## அனைத்து மருத்துவமனையும் பயன்படுத்தும் வகையில்

# கங்கா மருத்துவமனை சார்பில் நாளைமுதல் இந்தியாவின் முதல் ஏர் ஆம்புலன்ஸ் சேவை

## தலைவர் சண்முகநாதன், விமானப்படை தளபதி தானோ துவக்கி வைக்கிறார்கள்

## மருத்துவ துறையில் புதிய புரட்சி என இயக்குனர்கள் ராஜசபாபதி, ராஜசேகரன் பெருமிதம்

**கோவை, ஜூன் 24–**

**கோவை கங்கா மருத்துவமனை சார்பில் நாளை துவங்கும், இந்தியாவின் முதல் ஏர் ஆம்புலன்ஸ் சேவையை, இந்திய விமானப் படை தளபதி பி.எஸ். தனோவா துவக்கி வைக்கிறார்.**

கோவை கங்கா மருத்துவமனை, விபத்து பிரிவு, எலும்பு முறிவு சிகிச்சை, பிளாஸ்டிக், மைக்ரோ அறுவை சிகிச்சை மூலம் துண்டிக்கப்பட்ட கை, கால்களை இணைத்தல் மற்றும் தீப் புண்களை குணப்படுத்துதல் போன்ற சேவைகளை கடந்த 1991 ம் ஆண்டு முதல் செய்து வருகிறது. இந்நிலையில், கங்கா மருத்துவமனையின், ஹெலிகாப்டர் ஆம்புலன்ஸ் சேவை குறித்து, தலைவர் சண்முகநாதன் முன்னிலையில், இயக்குநர்கள் டாக்டர் எஸ்.ராஜசபாபதி, டாக்டர் எஸ்.ராஜசேகரன் கூறியதாவது:–



இந்த ஆம்புலன்ஸ் சேவை முயற்சி, இந்த பகுதியில் மருத்துவத்துறையில் ஒரு புதிய புரட்சியை ஏற்படுத்தும், கோவைக்கு பெருமை தருவதாக அமையும். இந்த ஹெலிகாப்டரில், நோயாளிகளை ஸ்டெர்ச்சரில் கொண்டு செல்லும் வசதி, இதய துடிப்பை சீராக வைக்கும் கருவி, சுவாசிப்பதற்கு தேவையான ஆக்சிஜன், நாடித்துடிப்பு மற்றும் ரத்த அழுத்தும் குறித்து கண்காணிக்கும் கருவி, மாரடைப்பு ஏற்படும் நோயாளிகளுக்கு தேவையான மருந்துகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் உள்ளன.

இதற்கான இறங்குதளம், டிஜிசிஏ அனுமதியுடன், துடியலூர், என்ஜிஜிஓ காலனியில் உள்ள வட்டமலைபாளையம் கங்கா நர்சிங் கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இது தென் மாநிலத்திலேயே, தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட முதல் இறங்குதளம். சிவில் விமான போக்குவரத்து இயக்குனர் ஜெனரல் அறிவுரைப்படி, 5 உதவியாளர்களுக்கு டெல்லியில் சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. பயிற்சியளிக்கப்பட்ட உதவியாளர் அல்லது மருத்துவர் ஒருவர், நோயாளியுடன் இருப்பார். 24 மணி நேரமும் 2 விமானிகள் பணியில் இருப்பார்கள். அதேபோல் நோயாளி ஹெலிகாப்டரில் பயணிக்கும்போது அவருக்கு உதவ ஒரு உதவியாளரும், மருத்துவரும் பயணம் செய்வார்கள்.

### நோயாளிகளுக்கு பயனுள்ள சேவை

இந்த ஹெலிகாப்டர் சேவை, கங்கா இறங்கு தளத்தில் காலைமுதல் மாலை வரை செயல்படும். இரவு நேர பயணத்தை, விமான நிலையத்தில் இருந்து மேற்கொள்வர். இந்த ஹெலிகாப்டரின் விமானிகள், இரவிலும் பறக்கும் அனுமதியை பெற்றுள்ளனர். இறங்குதளம் இல்லாத பகுதிகளில், பள்ளி, கல்லூரி மைதானத்தை தற்போது பயன்படுத்தி கொள்ளலாம்.

தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்கள் மற்றும் தென் மாநிலங்களில், ஒரு தற்காலிக ஹெலிகாப்டர் இறங்குதளம் அமைக்கப்படும். சாலை மூலம் மருத்துவமனைகளை சென்றடைய முடியாத நோயாளிகளுக்கு, இந்த சேவை மிகவும் பயனுள்ளதாக அமையும். ஊட்டி, கொடைக்கானல், மூணாறு போன்ற மலைப் பிரதேசங்களில் இருந்து கோவைக்கு சாலையில் வர குறைந்தபட்சம் 3 முதல் 5 மணி நேரத்திற்கு மேல் ஆகும். ஆனால் இந்த சேவை மூலம் 10 முதல் 20 நிமிடத்தில் வர இயலும்.

நவீன மருத்துவ உபகரணங்களுடன் உருவாக்கப்பட்டுள்ள இந்த ஹெலிகாப்டர் மூலம், தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா உள்பட 500 கி.மீ தூரத்திற்கு இடைவிடாமல் பறக்க முடியும். எரிபொருள் நிரப்ப இடையில் தரையிறங்க வேண்டிய அவசியம் இல்லை. 1992ம் ஆண்டு தயாரிக்கப்பட்ட ஹெலிகாப்டர், 2 என்ஜின்களை கொண்ட 'அகுஸ்தா 199' ரகத்தை சேர்ந்தது. ஹெலிகாப்டரை பராமரிக்க 3 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். இது அதிகபட்சமாக 120 கடல் மைல் வேகம் செல்லக்கூடியது.

விமான ஓட்டிகளுக்கு டிஜிஜிஎஸ் மூலம் 6 மாதம் மற்றும் 1 ஆண்டுக்கு ஒருமுறை பயிற்சிகள் மற்றும் தேர்வுகள் நடத்தப்படும். மூத்த கேப்டன் எஸ்.கே.பட்டாச்சார்யா, கடந்த 1978 ம் ஆண்டு முதல் இந்திய விமான படையில் பணிபுரிந்து வருகிறார். கேப்டன் நவீன்குமார் 11 ஆண்டுகளாக பார்முலா 1 கார் விபத்து பிரிவில் பணிபுரிந்து வருகிறார். இவர்கள் 2 பேருக்கும் அடிப்படை மருத்துவ உதவிகள் செய்யும் பயிற்சியும் பெற்றுள்ளனர். இவர்கள் மூலம் விபத்தில் சிக்கிய 18 கார் பந்தய வீரர்கள் தற்போது உயிருடன் உள்ளனர். இத்தாலி நாட்டில் தயாரிக்கப்பட்ட இந்த ஹெலிகாப்டரில், 2 பைலட், 1 மருத்துவர், செவிலியர், நோயாளி, அவரது உறவினர் என 6 பேர் பயணிக்க முடியும்.




### குறைந்த கட்டணம்

கங்கா ஏர் ஆம்புலன்ஸ் சேவையை, கங்கா மருத்துவமனை நோயாளிகள் மட்டுமல்லாமல், இந்த பகுதியில் உள்ள அனைத்து மருத்துவமனையை சேர்ந்த நோயாளிகளும் பயன்படுத்தலாம். தென்பகுதியில் உள்ள 4 மாநிலங்களில் இருக்கும் மருத்துவமனைகளுக்கும் இது ஒரு பெரிய வாய்ப்பு. இந்த ஹெலிகாப்டர் சேவையை அவசர நோயாளிகளுக்கு மட்டுமல்லாமல் இதயம், நரம்பியல், குழந்தைகளுக்கான அவசர சிகிச்சை மற்றும் உடல் உறுப்பு தானம் போன்றவற்றிக்கும் பயன்படுத்தலாம்.

இந்த சேவைக்கு, நோயாளிகளிடமிருந்து 1 மணிநேர கட்டணமாக, மிகக் குறைந்த அளவே வசூலிக்கப்படும். தனி விமானம் அல்லது ஹெலிகாப்டர் உபயோகம் செய்யும் செலவினை காட்டிலும், 40 முதல் 50 சதவீதம் வரை குறைவான கட்டணமே வசூலிக்கப்படும்.

சேவையினை பெற, 1800 4252 5555 மற்றும் 90030 10200 என்ற எண்ணில் 24 மணிநேரமும் தொடர்பு கொள்ளலாம். இதற்காக மருத்துவர் காயத்திரி ஆனந்தகிருஷ்ணன் தலைமையில் 20க்கும் மேற்பட்ட மருத்துவர்கள், அலுவலர்கள் பணிபுரிய உள்ளனர். இந்த சேவையால் கங்கா மருத்துவமனை மிகவும் பெருமை கொள்கிறது என்று தெரிவித்தனர்.

இந்த சேவையை, மருத்துவமனையின் தலைவர் டாக்டர் ஜெ.ஜி.சண்முகநாதன் தலைமையிலும், நிர்வாக இயக்குனர் கனகவள்ளி சண்முகநாதன் முன்னிலையில், இந்திய விமானப்படை தலைமை தளபதி தானோ, நாளை மாலை 4 மணிக்கு துவக்கி வைக்கிறார். இந்நிகழ்ச்சிக்கு நொய்டா வருமான வரித்துறை ஆணையர் எஸ்கே ஷ்ரீவஸ்தவா தலைமை தாங்குகிறார். விமானப்படை மருத்துவ சேவை பிரிவின் ஓய்வு பெற்ற இயக்குனர் ஜெனரல், தளபதி அனில் பெல், கலெக்டர் ஹரிஹரன், போலீஸ் கமிஷனர் அமல்ராஜ், மேற்கு மண்டல போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் பாரி ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

கங்கா மருத்துவமனையின் 25 ம் ஆண்டு வெள்ளி விழா துவங்கும் நிலையில், இந்த சாதனை மேற்கொள்ளபட்டுள்ளது.




# வெட்கிரைண்டர்களுக்கான 28 சதவீத ஜிஎஸ்டி வரியை குறைக்க வேண்டும்

## சங்கத்தலைவர் ராதாகிருஷ்ணன் வலியுறுத்தல்



**கோவை, ஜூன் 24–**

**கோவை வெட் கிரைண்டர், உதிரிபாக தயாரிப்பாளர்கள் சங்கத்தலைவர் ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:**

தமிழகத்தில் வெட் கிரைண் டர் உற்பத்தி, கோவையில் மட்டுமே உள்ளது. இதில் வெட் கிரைண்டர், உதிரிபாகங்கள் தயாரிப்பில் 1,200 நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. இதில் 40 ஆயிரத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். தினசரி ரூ.10 கோடி மதிப்பிலான உற்பத்தி நடந்து வருகிறது.

வெட் கிரைண்டர்களுக்கு தற்போது 5% வாட் வரி மட்டுமே உள்ள நிலையில், வரும் ஜூலை முதல் ஜிஎஸ்டி வரி அமலாகும் போது, 28% வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

### தொழிலை பாதிக்கும்

எனவே வெட்கிரைண்டர்கள் விலை, தற்போதைய விலையை காட்டிலும் கூடுதலாக 1,000 க்கு மேல் உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மக்களால் அன்றாடம் உட் கொள்ளப்படும் உணவான இட்லி மாவு தயாரிக்க, பயன்படும் வெட் கிரைண்டர்களுக்கு 28% வரி விதிப்பால் இத்தொழிலில் ஈடுபட்டுள்ள சிறு, குறு தொழில் முனைவோர்கள் கடுமையாக பாதிக்கப்படுவார்கள்.

கிரைண்டர்களை கடைக்காரர் களுக்கு கொடுத்து, பலமாத தவணை முறையில் பணம் பெற்று வரும் குறுந்தொழில் முனைவோருக்கு, புதிய வரி விதிப்பிற்கு பின் வெட் கிரைண்டர் உற்பத்தியாளர்கள் 28% வரியையும் சேர்த்து உடனடியாக அரசுக்கு செலுத்த வேண்டியுள்ளது. இது உற்பத்தியாளர்களின் பொருளாதாரத்தை மிகவும் பாதிக்கும். இந்த புதிய வரி விதிப்பின் மூலம், வெட் கிரைண்டர்களுக்கு ஜிஎஸ்டி வரி விதிப்பில் 28% என்பது வாங்கும் நுகர்வோரையும் கடுமையாக பாதிக்கும். இதனால் மக்களிடம் வாங்கும் சக்தி குறைந்து, விற்பனையும், உற்பத்தியும் குறைந்து, இத்தொழில் நலிவடையும். இதனால் உற்பத்தியாளர்கள், தொழிலாளர்கள் வேலை இழப்பிற்கு ஆளாவார்கள்.

நுகர்வோர் மற்றும் கிரைண்டர் தொழிலை பாதுகாக்க உடனடியாக ஜிஎஸ்டி வரி விகிதத்தை குறைக்க வேண்டும். வரி குறைப்பு செய்யும் வரை, அரசுக்கு செலுத்தும் வரிக்கு 90 நாட்கள் அவகாசம் வழங்க வேண்டும். இவ்வாறு ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.



# நாமக்கல்லில் அம்மா ஆரோக்கியத்திட்டம்: கலெக்டர் ஆசியாமரியம் துவக்கி வைத்தார்

**நாமக்கல், ஜூன் 24–**

**நாமக்கல் அரசு தலைமை மருத்துவமனையில் மருத்துவம், ஊரக நலப்பணிகள் துறையின் சார்பில் அம்மா ஆரோக்கியத் திட்டத்தினை கலெக்டர் ஆசியா மரியம் துவக்கி வைத்தார்.**

நாமக்கல் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில், மருத்துவம், ஊரக நலப்பணிகள் துறையின் சார்பில் அம்மா ஆரோக்கியத்திட்ட துவக்க நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு கலெக்டர் ஆசியா மரியம் தலைமையேற்று அம்மா ஆரோக்கியத் திட்டத்தினை துவக்கி வைத்தார்.

30 வயதிற்கு மேற்பட்ட அனைவரும், ஆண்டுக்கு ஒரு முறை இலவசமாக அடிப்படை உடல் பரிசோதனைகள் செய்வதன் மூலம், ஆரம்ப நிலையிலேயே நோயை கண்டறிந்து ஆரோக்கியத்தை மேம்படுத்தி நலமாக வாழ்வதற்கு வழி வகுப்பதற்கான திட்டம் அம்மா ஆரோக்கிய திட்டமாகும். இத்திட்டத்தின் மூலம் கிராமம் மற்றும் நகர்ப்புறங்களைச் சேர்ந்த அனைவரும் பயன்பெறலாம்.

### 10 பேருக்கு அட்டை

அம்மா ஆரோக்கிய திட்டத்தின் கீழ், ரத்த அழுத்தம், ஹீமோகுளோபின் அளவு, இரத்த வகை பரிசோதனை, ரத்தத்தில் சர்க்கரை அளவு, இரத்தத்தில் கொழுப்புச்சத்து அளவு, ரத்தத்தில் கிரியாட்டினின் அளவு, சிறுநீரில் உப்புச்சத்து, சிறுநீரில் சர்க்கரை, வாய்ப்புற்று நோய் பரிசோதனை, பார்வை மற்றும் கண்புரை பரிசோதனை, தோலில் ஏற்படும் நோய்களுக்கான பரிசோதனை, மருத்துவ அலுவலர் மூலமாக பொது உடல் பரிசோதனை உள்ளிட்ட பல்வேறு பரிசோதனைகளும், பெண்களுக்கு கர்ப்பபை வாய் புற்றுநோய் பரிசோதனை, மார்பக புற்றுநோய் பரிசோதனை உள்ளிட்ட பல்வேறு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

அம்மா ஆரோக்கியத்திட்டத்தின் கீழ் இலவச பரிசோதனை செய்து கொண்ட 10 நபர்களுக்கு அம்மா ஆரோக்கியத்திட்ட அடையாள அட்டையினை கலெக்டர் ஆசியா மரியம் வழங்கினார்.

நிகழ்ச்சியில், இணை இயக்குநர் (மருத்துவப்பணிகள்) சரஸ்வதி, அரசு தலைமை மருத்துவமனை கண்காணிப்பாளர் செல்வக்குமார், தொற்றா நோய் பிரிவின் மருத்துவர் ராஜேஸ் உட்பட மருத்துவர்கள், செவிலியர்கள் கலந்து கொண்டனர்.



# நீலகிரி விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்: கலெக்டர் சங்கர் பங்கேற்பு

**நீலகிரி, ஜூன் 24 –**

**விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் கலெக்டர் சங்கர் கலந்து கொண்டார்.**

நீலகிரி கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் கலெக்டர் தலைமையில் நடைபெற்றது. விவசாய சங்கங்களை சார்ந்த விவசாயிகள், தோட்டக்கலை இணை இயக்குநர் மற்றும் இதர துறையினைச் சார்ந்த அரசு அலுவலர்களும் கலந்துக் கொண்டனர். விவசாய சங்கங்களிடமிருந்து கோரிக்கைகள் பெறப்பட்டு உரிய துறை அலுவலர்களுக்கு முன்னதாக அனுப்பப்பட்டு தகுந்த விபரம் பெற்று விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டத்தில் 32 கோரிக்கைகள் விவாதிக்கப்பட்டு முடிவு காணப்பட்டது.

### பால் கறக்கும் இயந்திரம்

தோட்டக்கலை துறையின் மூலம் விவசாயிகளுக்கு சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், உயர்ரக காய்கறி விதைகள் வழங்க சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டம் பிரேரணை திட்ட இயக்குநருக்கு, அனுப்பப்பட்டுள்ளது. திட்ட இயக்குநர், சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டம் அவர்களிடமிருந்து அனுமதி மற்றும் போதுமான நிதி ஒதுக்கீடு பெற்றவுடன் காய்கறி விதைகள் வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

பால் கறக்கும் யந்திரம் தேவைப்படும் பயனாளிகள் யார் என்ற விவரம் மற்றும் சங்கத்திலிருந்து தீர்மானம் பெற்று சமர்ப்பிக்க அனைத்து சங்கங்களுக்கும் தெரிவிக்கப் பட்டுள்ளது. அவ்வாறு தீர்மானம் மற்றும் தேவைப்பட்டியல் கிடைத்தவுடன், தேவையான பால் கறக்கும் இயந்திரத்தை சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டத்தின் மூலமாக மானிய விலையில் பெற்று வழங்க இயலும் என்ற விபரம் ஆவின் துறை மூலம் தெரிவிக்கப்பட்டது.

கூட்டுறவு சங்கத்தின் மூலம் 20172018ஆம் ஆண்டிற்கு பயிர்கடன் குறியீடாக ரூ.162 கோடி பெறப்பட்டு அனைத்து சங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. மேலும், கடந்த 15ந் தேதி வரை 971 உறுப்பினர்களுக்கு ரூ.661 லட்சம் பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது என்பதையும், நிலுவையிலுள்ள விண்ணப்பங்களை விரைந்து பரிசீலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.



# கோவை மாநகராட்சி அலுவலகத்தில் நவீன வசதிகளுடன் 'ஸ்மார்ட் ட்ரீ'

**கோவை, ஜூன் 24–**

**மாநகராட்சி அலுவலகத்தில் நவீன வசதிகளுடன் 'ஸ்மார்ட் ட்ரீ'திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.**

கோவையில் சீர்மிகு நகரத்திற்கான பணிகள் முழுவீச்சுடன் நடைபெறுகிறது. இன்னும் பல ஆண்டுகளுக்கு பிறகு, கோவை மாநகரம் எப்படி இருக்கும் என்பதை மனதில் வைத்து, திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. சீர்மிகு நகரத்திற்கான திட்டங்கள், ஒன்றன் பின் ஒன்றாக செயலாக்கத்திற்கு வருகின்றன. இதற்கு முன்மாதிரியாக, 'ஸ்மார்ட் ட்ரீ' திட்டம் செயலாக்கத்திற்கு வந்துள்ளது.

கோவை மாநகராட்சி பிரதான அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள, 'ஸ்மார்ட் ட்ரீ' என்பது ஒரு மரம் போன்ற அமைப்பு, அதில் சூரிய கூறுகள் பொருத்தப்பட்டு உள்ளது. அதில், இருந்து 8 முதல் 9 யூனிட் அளவு, ஆற்றல் உருவாகிறது.

எப்படி மரம் வந்து பயன் தருகிறதோ, அதுபோல, இங்கு வரும் பொதுமக்களுக்கு, தேவையை பூர்த்தி செய்யும் வகையில், அதில் ஒரு வயர்லெஸ்ரூட்டர் பொருத்தப்பட்டுள்ளது, அதைக்கொண்டு, மக்கள் இணையதள சேவை பெறலாம்.

### 'ஸ்மார்ட் ட்ரீ' வசதிகள்

காற்று மாசு கண்காணிப்பு சென்சார்கள் பொருத்தப்பட்டுள்ளது. இதைக்கொண்டு, மாசு எவ்வளவு ஏற்பட்டுள்ளது. காற்று நல்லபடியாக இருக்கிறதா அல்லது இல்லையா என்பதை தெரிந்து கொள்ள முடியும். சூரிய கூறுகள் கொண்டு 8 தெரு விளக்குகளை எரிய வைக்க முடியும்.

அதாவது ஒரே ஒரு ஸ்மார்ட் ட்ரீயில், பல்வேறு வசதிகள் பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இன்னும், என்னென்ன திட்டங்கள் சேர்க்க வேண்டும் என்று, ஆலோசனையில் உள்ளது. இதற்கு மிகப்பெரிய பொருட் செலவு கிடையாது.

மிக குறுகிய காலத்தில் உற்பத்தி செய்யக் கூடியவை வரும் காலங்களில், கோவை மாநகரில் உள்ள பல்வேறு பகுதிகளுக்கு, இந்த ஸ்மார்ட் ட்ரீயை கொண்டு வரும் பணி மேற்கொள்ளப்படும். இதுபோல, பல்வேறு திட்டங்கள் மிக விரைவில், முழுவடிவில் செயல்படுத்தப்படும் என்று மாநகராட்சி கமிஷ்னரும், தனி அலுவலருமான விஜயகார்த்திகேயன் தெரிவித்தார்.




டிமொபைல் கல்வி அறக்கட்டளை சார்பில் மாணவ, மாணவியர்கள், குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை, நோட்டு புத்தகங்கள் வழங்கும் விழா நடைபெற்றது. இதில், கலெக்டர் ஹரிகரன் கலந்து கொண்டு மாணவர்களுக்கு உதவித் தொகைகளை வழங்கினார். உடன், மேனேஜிங் ட்ரஸ்டி இப்ராஹிம், அப்துல் ரசீது, பிரண்ட்ஸ் ஆப் போலீஸ் ஒருங்கிணைப்பாளர் செந்தில்குமார், எஸ்பிபி சில்க் ஜவுளிக்கடை உரிமையாளர் கார்த்திகேயன், மருதாசலம், நந்தகோபால் ஆகியோர் உள்ளனர். இதில் பங்கேற்ற குந்தைகளுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டது.



திருப்பூர் வடக்கு, தெற்கு போக்குவரத்து காவலர்கள், நாட்டு நலத்திட்டத்தின் கீழ், போக்குவரத்து காவல் நிலைய வளாகத்தில் உள்ள மரக்கன்றுகளை பராமரிக்கும் பணியில் ஈடுபட்டனர்.